

# ஜாதியும் மதமும் சரீரத்தின் அசுத்தங்கள்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. இன்று உலகிலே மனுஷரை கொல்லக்கூடிய மிகக்கொடிய வியாதிகளைக்காட்டிலும், அவர்களை கொள்ளையிடும் சாத்தானின் பாவங்களில் முதன்மையாக இருக்கும் இரண்டு அசுத்தங்கள்:

- ஜாதியும்

- மதமும்

இதை நாம் எப்படிஅறிந்து, உணர்ந்து, திருந்துவது. பரிசுத்த வேதாகமம் மாத்திரமே நமக்கு இதைக்குறித்து தெளிவான விளக்கமளிக்கின்றது. தேவன் மனுஷரை உருவாக்கியபோது இப்படிப்பட்ட பிரிவினைகளை தோற்றுவிக்கவில்லை. அவர் ஒரு ஆணையும், ஒரு பெண்-ணையும் மாத்திரம் உருவாக்கி, இருவரையும் இந்த பூமியிலே அதிகாரமுள்ளவர்களாக வைத்தார். அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே, தேவனுடைய அன்பை இழந்து, தங்களுக்கு கெடுதியை வரவழைத்து கொண்டவர்கள் மனுஷர்கள். கீழ்ப்படியாமை நம்மை தேவனின் நீதியைவிட்டு பிரிக்கின்றது.

அப்படியென்றால் இந்த ஜாதி உருவாக முக்கியமான நோக்கமென்ன? சாத்தான் எதற்காக மனுஷரை இப்படி பைத்தியமாக்கியிருக்கின்றான்?

பரிசுத்த வேதத்திலே தெளிவாக ஒரு காரியத்தை அறிந்து கொள்ளமுடியும் (ஆதியாகமம் 1:28); அது தேவன் மனுஷரை நோக்கி:

**'நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக்கீழ்ப்படுத்தி (சொந்தமாக்கி), எல்லா ஜீவராசிகளையும் ஆண்டுகொள்ளுங்கள்'**, என்பது.

இங்கே தேவன் முதல் குடும்பத்திடம் ஜாதிகளை உருவாக்குங்கள் என்று கூறவில்லை. இந்தப்புனிதப்படைப்புகள் தேவனைவிட்டு விலகியதும், தங்கள் வாழ்க்கையை நடத்திச்-செல்லும் வேளையிலே, பல பிரிவுகளை, அறிந்தோ, இல்லை அறியாமையினாலோ உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். **தேவனைச்சார்ந்திராத ஜீவியத்திலே, பிரிவினைகளை உண்டுபண்ணும் தீய சக்தியாக இருப்பவன்தான் சத்துருவான சாத்தான்.** மனுஷர்கள் இப்பொழுது தேவனுக்கும், இந்த சத்துருவுக்கும் பொதுவாக இருக்கின்றனர். அவர்கள் யாருடைய வார்த்தைக்கு தங்களது செவிகளைத்திறக்கின்றார்களோ, அதன்படி ஒன்று பரிசுத்த ஜாதியாக அல்லது இந்த உலகத்தின் பல பிரிவுகளில் ஒரு கூட்டத்தை சேர்ந்தவர்களாக வாழ்ந்து போகிறார்கள்.

ஜாதி என்பது ஒரு சரீர அடையாளம். நமது பெயர் கூட சரீர அடையாளம்தான். ஆனால் அதனோடு ஜாதி என்ற விலாசத்தையும் சேர்த்துக்கொள்வதின் நோக்கம் உள்ளானது (Implicit aim: Selfishness). இதிலே ஒரு சுயநலம் ஒட்டிக்கொண்டு இருப்பதை நாம் உணர-முடியும். சரீர அடையாளத்தை தேவன் முதல் மனுஷனுக்கும், மனுஷிக்கும் ஏற்படுத்த-வில்லை என்று வேதம் நமக்கு தெளிவாக சொல்கின்றது. அவர்கள் தேவ சாயலில், ஒரு உன்னத நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டார்கள். ஆனால் கீழ்ப்படியாமையால் உருவான பாவம் (அநீதி), இரண்டாவது தலைமுறையில், மனிதக்கொலையில் முடிந்தபோதுதான், முதல் குடும்பம், தங்களது தவறை உணர ஆரம்பித்தது. தேவன் உருவாக்கிய மனுஷனும், மனுஷியும் பலுகிப்பெருகியபோது, அவர்களுக்கு காயின், ஆபேல், என்ற இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். காயின் தனது சொந்த சகோதரனை கொலை செய்ய நினைத்த வேளையில், தேவ ஆவியானவர் அந்த எண்ணம் தவறு என்றுணர்தினார். ஆனால் தீமை இந்த உலகிலே மனுஷரை பொல்லாதவர்களாக மாற்றியிருப்பதை, காயின் தேவனுடைய வார்த்தைகளை நிராகரித்ததின்மூலம் நாம் உணர்ந்துகொள்ளலாம். அப்படிப்பட்ட பாவிகளுக்கு தேவன் ஒரு அடையாளத்தை சரீரத்திலே போடுகின்றார் (ஆதியாகமம் 4:15). அவர்களும் இந்த உலகிலே வாழ அனுமதியளிக்கின்றார். இதில் அவர்கள் பெருமைப்பட ஒன்றுமில்லை. தேவன் மனுஷனை அழிப்பதற்காக உருவாக்காமல், தமது மகிமை வெளிப்-படும்படியாக உருவாக்கியிருப்பதினால், தனது சகோதரனை கொன்ற பாவிக்கும்கூட அவர் இரக்கம் காட்டுகிற உள்ளமுடையவராக இருக்கின்றார். இதுதான் துன்மார்க்கன் தீங்கு நாளை நினைத்து, மனம் திருந்தும்படியாக விட்டுவைக்கப்பட்டிருப்பதோ?

பிரியமானவர்களே, இன்னுமொரு இடத்திலும்கூட தேவன் சரீரத்திலே அடையாளம்-போடும்படி சொல்லியிருக்கின்றார். எசேக்கியல் 9:4-6 ல் எருசலேம் நகரத்தில் உள்ள தம்முடைய மனுஷருக்கு மாத்திரம், நெற்றியிலே ஒரு அடையாளத்தை போடும்படி கட்டளையிட்டார். எதற்காக? விக்கிரக ஆராதனைக்காரர்களை சங்கரிக்கும்படியாகவும், தம்முடைய ஆவிக்குரிய பிள்ளைகளைக் காக்கும்படியாகவும் இந்த அடையாளம் போடப்பட்டது. வேத வசனங்களை ஆராய்ந்து பார்க்கும்போது சரீர அடையாளம், தேவனால் ஒரு உன்னத நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டதை உணரமுடியும். அதாவது தவறு செய்பவர்களை தனித்து காட்டவும், தமது பிள்ளைகளை வேறுபடுத்தவும் ஒரு நியாயத்தீர்ப்பின் அடையாளத்தை காட்டியிருக்கின்றார்; ஒரு குற்றவாளி உயிர்ப்-பிழைக்கும்படியாக, காயினுக்கு மனந்திருந்தலின் அடையாளத்தை போட்டவர் நமது தேவனாகிய கர்த்தர். இந்த இரண்டு அடையாளங்களிலுமே, தேவனின் கிருபையிருப்பதை பார்க்க முடிகிறது. இந்த கிருபையின் அடையாளம் இன்று நாம் எடுக்கும் முழுக்கு ஞானஸ்தானம் என்பதை உணரவேண்டும்.

## ஜாதி என்ற சரீர அடையாளம் எப்படி மனிதரிடம் உருவெடுத்தது?

மனுஷர் பலுகிப்பெருகிய ஒரு காலத்திலே, மிகவும் பொல்லாதவர்களாகி பல தீமையான காரியங்களை செய்து வந்தனர். ஆதியாகமம் 4:20-22, வசனங்களிலே, லாமேக்கின் பிள்ளைகள் வெவ்வேறு தொழில்களை தெரிந்து கொண்டதைக்குறித்து கற்றுக்கொள்கின்றோம். அதுமாத்திரமன்று, தொடர்ந்து அதே வேதப்பகுதியை நாம் வாசிக்கும்பொழுது (ஆதியாகமம் 4:23), இந்த லாமேக்கு, தன்னுடைய சந்ததியை பலமுள்ளதாக காண்பிக்கும்படியாக, இரண்டு மனுஷரை கொலை செய்ததாக ஒப்புக்கொள்வதையும் பார்க்கமுடிகிறது. அன்பான தேவ ஜனமே, இங்கேதான், சாத்தானின் திட்டம் நிறைவேறத்தொடங்குவதைப் நாம் பார்க்க முடியும்.

அது என்ன?

காயின் தனது தம்பி ஆபேலை பொறாமையினிமித்தம் கொலைசெய்தபோது, சாத்தான் மனுஷர் மீதான தனது வெறுப்பை இந்த உலகிற்கு வெளிப்படுத்தினான்; அது தேவ சாயலான ஆத்துமா, தேவனது ஆலயமாகிய நமது சரீரத்தில் தங்கி அவரை சேவிப்பது. வேற்றுமைகள் வேறூன்றத்தொடங்கிய அந்தக்காலத்திலே, இன்னுமொரு அக்கிரமும் நடந்தேறியது. சாத்தானாகிப்போன லூசிப்பரின் மாயமான வார்த்தைகளை நம்பிய ஒரு பங்கு தேவ தூதர்கள், மாம்சீக ஆசைகளில் பிரியம் கொண்டு வான உலகத்தைவிட்டு இந்த பூமியைத் தெரிந்துகொண்டார்கள் (ஆதியாகமம் 6:1, 2). இதனால் இந்த பூமியிலே பலவான்கள் உருவானதாக வேதம் நமக்குப்போதிக்கின்றது. சாத்தான், தேவப்பிள்ளைகளை தன்பக்கம் இழுக்கும் நோக்கத்தில், அவர்களுக்கு மாம்சீக இச்சைகளை போதித்து, பூமிக்கு அழைத்து வந்ததாக ஒரு சாரார் நம்புகிறார்கள். வேறு சிலர், தவறான வழியிலே மாம்சத்திலே இன்பம் அடையும்வெறிகொண்டவர்கள், இப்படிப்பட்ட பலவான்களாக தங்களை உருவாக்கி கொண்டாதாக எண்ணுகிறார்கள். எப்படியாயினும், இராட்சதர் (Giant) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் பதம், ஒருவன் மற்றவனைக் காட்டிலும் தனது சரீரத்திலே அதிகாரம் பெற்றிருப்பதையே காட்டுவதாக உள்ளது. இங்கேதான், மனுஷரில் ஏற்றத்தாழ்வுகள் சரீர அடிப்படையில் உருவாவுவதை நாம் பார்க்கமுடிகிறது. சரீரத்தில் பலமுள்ளவன் உயர்ந்தவன், மற்றவன் தாழ்ந்தவன் அல்லது அடிமை என்ற கோட்பாடு உருவாகி, வித்தியாசம் செயல்பட ஆரம்பிக்கின்றது.

நன்றாக யோசனை செய்து பார்த்தால், இது சாத்தானிலிருந்து விளைந்த தீய விதை என்பது நமக்குப்புரியும். அவனுக்கு சாதமாக இருந்த காரியங்கள்:

- காம இச்சைக்கு விழுந்த தூதர்கள் அல்லது இராட்சத மனுஷர்கள் (காயின் வம்சமாக இருக்கலாம்)
- ஆராதனை பசிக்கு விழுந்த தூதர்கள் (இன்றும் இவர்களை தேவர்கள் என்று நினைத்து அநேகர் தொழுது கொள்ளுகிறார்கள்)
- மனுஷ குமாரத்திகள்
- மிருக குணமுடைய மனுஷர்கள்

மேற்க்கூறிய நான்குவகைப்பிரிவினரிடமும் ஒரு ஒற்றுமையைப்பார்க்க முடியும்; அது தமது சொந்த சரீரத்தை நேசித்தவர்கள், அடையாளமாக்கியவர்கள் இவர்கள் என்பது.

ஆமாம் நண்பர்களே!

ஜாதி என்பது, நம்மை வேறுபடுத்தும் அவலம், அது சரீர சம்பந்தமான அடையாளம்.

## முதல் அழிவிற்கு பிறகு என்னவாயிற்று

தேவன் உலகிற்கு முதல் அழிவைக் கொண்டுவந்ததே, மேலே கூறிய சரீர இச்சைகளுக்கு ஒரு தீர்ப்பாகத்தான் என்று வேதம் நமக்குப்போதிக்கின்றது (ஆதியாகமம் 6:5-8). நோவா என்ற ஒரு மனுஷனுக்கு மாத்திரம் கர்த்தரின் கண்களிலே தயவு கிடைத்ததாக பரிசுத்த வேதம் சொல்கின்றது. அவன் தேவனுடைய பார்வையிலே நீதிமானாக எண்ணப்பட்டான். கவனமாக இதைப்பற்றி சிந்திப்போம். இங்கே சரீர ஏற்றத்தாழ்வுகள் உருவான ஒரு காலக்கட்டத்திலே, தேவன் ஒரு குடும்பத்தை மட்டும் காப்பாற்றுவதை கவனிக்க வேண்டும்.

ஏன்?

நோவா தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, அவரது திட்டத்தை பூமியிலே நிறைவேற்ற ஒப்புக்கொண்டதினால். தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியாத மற்ற எல்லோருடைய பாவ சரீரங்களும் அழிக்கப்பட்டன.

**பிறகு எப்படி மறுபடியும் இந்த ஏற்றத்தாழ்வுகள் மனுஷரிடம் தோன்றியது?**

ஒரு குடும்பத்திலிருந்து உருவான, நோவாவின் மூன்று மகன்களும் ஒரே ஜாதியாகத்தானே இருக்க வேண்டும். பிறகு எப்படி இத்தனை ஏற்றத்தாழ்வுகள் மனுஷரிடம் தோன்றியது. தேவனைவிட்டு விலகிய சாத்தானும், அவனது வார்த்தைகளை நம்பி மோசம் போன மூன்றில் ஒரு பங்கு தூதர்களும், தண்டனைக்காக காத்திருக்கும் ஆவி புருஷர்கள்; அதாவது முன்பு பரமண்டலங்களில் வாழ்ந்த ஆத்துமாக்கள்; அவர்களுக்கு நித்திய காலமாக இருளிலே வாழும் ஒரு துன்பம் நிறைந்த வாழ்க்கை காத்திருக்கின்றது (II பேதுரு 2:4; வெளி 19:20; 20:10; யூதா 6). இந்த அசுத்த ஆவிகள் இப்பொழுது சாத்தானின் சேனைகளாகப்பணியாற்றுகின்றனர்.

எதற்காக?

இந்தப்பூமியிலே இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆத்துமாவும், பரலோகத்திலே தேவனது பிள்ளையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த விழுந்துப்போன அதாவது சண்டைப்போட்ட தூதர்களுக்குப்பதிலாக சமாதான தூதர்களாக இயேசுவின் நாமத்திலே அங்கிகாரம் பெறுகிறார்கள் (மத்தேயு 22:30-32). ஆகையால் சாத்தானும் அவனது தூதர்களும் எப்படி நம்மை அவ்வளவு சுலபமாக தேவனிடம் செல்ல ஒப்புக்கொள்வார்கள். அதுமாத்திரமன்று, அவர்களது ஆராதனைப்பசியை யார் நிறைவேற்றுவது. அதனால்தான் அப்பாவி மனுஷருக்கு இவர்கள் பொய்க்கதைகளைக்கூறி, உண்மையான தெய்வத்தை வணங்கவிடாமல் தடுத்துவிடுகின்றார்கள்.

கர்த்தர் நோவாவோடு ஒரு புதிய உடன்படிக்கையை செய்தார்; அதன்படி சரீரத்திலே வாழும் உயிர்கள் முற்றிலுமாக இனி அழிக்கப்படுவதில்லை என்று. நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சை செடிகளை நாட்டினான். அதுவரையில் தவறேதுமில்லை. ரசம் பிழிந்து அதை புளிக்கவைத்ததின் மூலம், புதிய உலகிலே அவன் தீமையைக்கொண்டு வந்தான். இதே நோவா, தேவ திட்டத்தை நிறைவேற்றும் காலத்திலே, சக மனிதரை மனம் திருந்தும்படி அழைத்த ஒரு சுவிசேஷகன் என்பதை நாம் மறந்து போகக் கூடாது. நாம்

தேவனிடம் சேர்ந்து பணியாற்றும்பொழுது மிகவும் கவனமாக பரிசுத்தத்தை காத்துக்கொள்ள வேண்டும்.

**அப்படியில்லையென்றால் முடிவு என்னவாகும்?**

நோவா குடித்து, வெறித்து, துணிவிலகி கிடப்பதை பார்க்கும்படி, சாத்தான், காமின் மனதை தூண்டுகிறான்; அதனால் தகப்பனிடம் அவன் சாபத்தைப் பெற்றுக்கொள்கிறான். பாவம் சரீரத்திலே மறுபடியும் ஆரம்பமானது. தகப்பனது நிர்வாணத்தைப்பார்த்து, ஏளனப்படுத்தியவன் காம். இது சாத்தானின் ஆதிகுணம் என்று நமது இரட்சகர் கூறியிருக்கின்றார் (யோவான் 8:44). சாத்தான் ஒரு மனுஷ கொலை பாதகன். எதற்காக பிசாசு என்று சொல்லப்படுகிற கடவுளின் எதிரி, மனித சரீரத்தின் மீது இத்தனை கோபம் கொண்டு அலைகின்றான்?

இந்த சரீரத்தை அழிப்பதினாலும், நம்மை தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தை செய்ய தூண்டுவதினாலும் இவனுக்கு என்ன லாபம்?

நமது பரம பிதா, மனிதனை, தமது சரீரப்பிள்ளயாகவும், ஆவியிலே அவரது சொந்த சாயலிலும் உருவாக்கியிருக்கின்றார்.

எதற்காக?

அவரது ஆராதனைக்காரனாக இருப்பதற்கு; துதி செலுத்துவதற்கு. ஆராதனைப்பசியில் வெந்த பிசாசு, தூயாதி தூயவரை துதிக்க விடாமல், நம் சரீரத்தை அசுத்தப்படுத்தி, பாவ இச்சைகளில் வழிநடத்தி, அவனை வணங்கும்படி செய்துவிடுகின்றான்.

நம் சரீரம் அசுத்தமாவதினால் மூன்று காரியங்கள் சாத்தானுக்கு சாதகமாக நடந்தேறுகிறது.

- அவனது தண்டனைக்காலம் தள்ளிப்போகின்றது
- அசுத்தமான நம் சரீரத்திலே தேவ ஆவியானவர் வசிக்க முடியாது; அதனால் நாம் தேவனற்ற ஒரு வாழ்க்கைக்குள்ளாக தள்ளப்படுகின்றோம்
- அநேகர், தேவனைவிட்டு பிரிந்து சாத்தானையும் அவனது தூதர்களையும் வணங்குபவர்களாக மாறிவிடுகின்றனர்.

சற்றே கூர்ந்து நோக்கினால், தேவன் ஞானமாக நமக்கு எல்லாப்பாதுகாப்பையும் செய்து வைத்திருப்பதை உணரமுடியும். சாத்தான் கடவுளாகும் ஆசையினால் பெருமை கொண்டான். கடவுள் தந்த தனது நிலையை உயர்வாக எண்ணினான். கடவுளைப்போல, தன்னையும் மற்றவர்கள் வணங்க வேண்டுமென விருப்பத்தை வளர்த்துக்கொண்டான். முடிவு, தேவனுக்கு சத்துருவாகிப்போனான். **கடவுளாகும் எண்ணம் தவறானது, பெருமைக்குணத்தை உருவாக்க கூடியது** (ஆதியாகமம் 3:5). இந்த ஆசை சாத்தானால் பூமியிலே மனுஷருக்குள் விதைக்கப்பட்டது. இது சரீரத்திலே அடையாளமாக வெளிப்படுகின்றது. பெருமையானது ஜாதி உருவாக வித்தானது. தனக்கு விரோதமாக மனுஷரை சாத்தான் நினைப்பதற்கு மற்றுமொரு முக்கிய காரணம், அவனது முன்னால் வேலையை தேவன் நமது பணியாக மாற்றியிருக்கின்றார். ஆமாம் நாமெல்லாரும் அந்த

அநாதி தேவனின் ஆராதனைக்காரர்கள். நமது பிரதான ஆசாரியர் (போதகர்), கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர்.

நண்பர்களே! ஜாதி உருவாக மூல காரணமே, சரீர இச்சைகளும், உறவுகளும்தான். வேதம் சொல்கிறதைப்பாருங்கள். இந்த காமின் சந்ததியார் பூமியிலே

- பராக்கிரமசாலிகளாகவும் (Physically Strong Personals, Rulers)
- வேட்டைக்காரரகளாகவும் (Hunters)
- பட்டணங்களை கட்டுபவர்களாகவும் (Builders/Construction Workers)
- விவசாயிகளாகவும் (Farmers)

உருவானார்கள்.

இங்கே மனுஷர்கள், தொழிலடிப்படையில் கோத்திரங்களாக உருவாகத்தொடங்கினார்கள். பட்டணங்களை கட்டும்போது, மனித நாகரீகம் வளரத்தொடங்கியது. பல தொழில்கள், பல பிரிவுகள், இன்று அதனால் பல ஜாதிகள். தொழில்களின் அடிப்படையில் உருவான பிரிவுகள், நாளடைவில் உற்பத்தி செய்யும் பொருள்களின் மதிப்பை சார்ந்து (Product based on commercial value), உயர்ந்த ஜாதிகள், தாழ்ந்த ஜாதிகள் என்றாயின. ஆனாலும் நண்பர்களே பாருங்கள், ஆரம்பம் என்னவோ நிர்வாணத்தில்தான். தேவன் அளிக்கும் சத்தியமான வார்த்தைகளால் நாம் இந்த நிர்வாணத்தை மூடாவிட்டால், சரீர அசுத்தமாகிப்போன இந்த ஜாதி என்ற பிசாசு நம் ஆத்துமாவை அழிக்கும் ஆயுதமாக மாறிவிடும்.

## ஜாதி எப்படி அநீதியாகும்?

ஜாதி என்பது தொழிலடிப்படையில் உருவான விஷயம் என்று எல்லோரும் இன்று ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மை. வேதாகமம் இதைக்குறித்து என்ன சொல்கின்றது? தேவனுக்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லையென்று தெளிவுப்படுத்துகின்றது. இது மனிதர்கள், பிசாசினால் தூண்டப்பட்டு, தங்களது இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ள ஏற்படுத்திய ஒரு வழிப்பாட்டு முறையென்று. எப்படி? பாருங்கள், இன்று, ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு கடவுள் என்று சாத்தான் மனுஷரை ஏமாற்றி வைத்திருக்கின்றானே! இது தீமையானது, அநீயானது. மனுஷரை பிரித்து வைக்கும் பிசாசின் சதித்திட்டம். ஜாதி என்பது சரீரப்பெருமைக்குரிய விஷயம். ஒருவன் தான் பிறந்த குலம், கோத்திரம் உயர்ந்தது என்று நினைத்தால், அது எதைக்குறிக்கின்றது? சரீர அடையாளத்தைத்தானே. அது நிறமாக இருந்தாலும் சரி இல்லை தொழிலாக இருந்தாலும் சரி, சரீர சம்பந்தமான அசுத்தங்கள், பிரிவுகள் எல்லாமே தேவனுடைய பார்வையில் அநீதிகளே. அதற்காகவே தேவக்குமாரன், இந்த சரீரத்தை ஒழித்து, மகிமையின் சரீரத்தை பெறும்படி நம்மை அழைக்கின்றார் (I கொரிந்தியர் 15:47-49). அநீதியான இந்த சரீரம் மரணமடைவதும், ஆத்துமா நியாயமான தீர்ப்புபெறுவதும் தேவ நீதியாக, மனுஷருக்கு முன்பாக பொதுவாக வைக்கப்பட்டுள்ளது.

## தொழிலடிப்படையில் உருவான ஜாதி எப்படி நிறவெறியானது?

நண்பர்களே, ஒன்றைத்தெளிவாக தெரிந்து கொள்வோம். தேவன் உருவாக்கின இந்த பூமியின் இயற்கையான எல்லா ஆசிர்வாதங்களையும் நாம், நமது பொல்லாத செயல்களால் கெடுத்து, மாற்றி வைத்துள்ளோம் (Global Warming, Hole in the Ozone Layer, Flood etc). தேவனாகிய கர்த்தர், சூரியனை ஒன்றும் நம்மை சுட்டெரிக்கும்படி உருவாக்கவில்லை. அவர் முதன்முதலில் வெளிச்சம் உண்டாக கடவது என்றுதான் சொன்னார்; பிறகு நான்காம் நாள்தான் சூரியனையும், சந்திரனையும் உருவாக்கினார். எதற்காக? பகலுக்கும், இரவுக்கும் வித்தியாசம் தெரியவும், காலங்களை கணக்கிடவும் அவைகளை ஏற்படுத்தினார். பகலையும், இரவையும் ஆள்வதற்கென்று அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே உண்டாக்கினார்.

- வெளிச்சம் - பகல்
- இருள் - இரவு

இந்த இரண்டு சுடர்களும் காலத்தை ஆளும் சக்தி படைத்தவைகள். இல்லையென்றால், மனுஷன் உறங்குவது எப்படி? நமது சரீர அமைப்பு அப்படியுள்ளது. தேவலோகத்திலே யாரும் தூங்குவது இல்லை. தேவன் உருவாக்கும் புதிய பூமியிலே, சூரியனும், சந்திரனும் இருக்காது. தட்ப வெப்ப சூழ்நிலைகள்மாறாது. தேவன்தாமே வெளிச்சமாய் இருப்பார். பெருமையில்லாத ஒரு தூதர் கூட்டம் அவரைத்தொழுது கொள்ள ஆயத்தப்படுத்தப்-பட்டிருக்கும்.

நோவா குடும்பம் மாத்திரம் காப்பற்றப்பற்றிருந்தும், எப்படி இந்த பெருமை மறுபடியும் மனித வாழ்விலே நுழைந்தது? சரீர பெருமை மறுபடியும் உருவாகியது காமின் சந்ததியினரால். சரீர இச்சைகளுக்கு இடம் கொடுத்த காமின் சந்ததியினர், தேவனது ஆசிர்வாதங்களை இழந்த நிலையில், தேவனது வழி நடத்துதலின்றி, சத்துருவின் தவறான போதனைகளை கடைப்பிடிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆம் நண்பர்களே, இன்று நம்மில் அநேகரும், இவர்களைப்போலத்தான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். தேவனது வழி நடத்துதலில்லாத வாழ்வு அழிவுப்பாதையென்று வேதம் நமக்குப்-போதிக்கின்றது.

**மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்,** நீதிமொழிகள் 14:12.

பாபேலில் கோபுரத்தை கட்டி, தங்களது பெயர்கள் நிலைக்கும்படி செய்யத்தீர்மானித்த, காமின் சந்ததியார், தேவனது நாமத்தை மறந்து போனார்கள் (ஆதியாகமம் 10:11; 11:3, 4).

இந்தத்தீமையான எண்ணத்தை அவர்கள் மனதிலே விதைத்த சத்துருவின் நோக்கமென்ன?

தேவனுக்கு விரோதமாக மனுஷரைத்திருப்புவதுதான். நாம் பாவம் செய்வதின்மூலம் தேவனின் பாதுகாப்பைவிட்டு பிரிகின்றோம். முடிவு, இரட்சிப்பின்றி இந்த உலகை கடந்து போகின்றோம். பெருமை பிடித்த மனுஷர், தேவனது கிருபையை உணரும்படி செய்ய, அவர்களை, பூமியெங்கும் சிதறிப்போகச்செய்தார் தேவனாகிய கர்த்தர். ஒன்றாய்ச்-சேர்ந்து கெட்டுப்போகாமல், பல இராஜ்ஜியமாக பிரிந்து போகும்படி செய்த தேவன், தமது ஞானத்தை இன்று விளங்கும்படி செய்திருக்கின்றார். எப்படி?

பல மொழிகளிலே இன்று நம்முடைய கர்த்தரை தொழுதுகொண்டாலும், அந்நிய பாஷைகளில் அவரை அழைத்தாலும், வாக்குமாறாத உன்னதமானவர், உடனே நம்மத்தியிலே தோன்றுகிறாரே. அல்லேலுயா கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக. பூமி முழுவதும் சிதறடிக்கப்பட்ட மனுஷர்கள், தங்களுக்கு பேர் உண்டாக பல பட்டணங்களை கட்டி, இன்று இயற்கையையே பாழ்படுத்தியுள்ளார்கள். அதனால் தட்ப வெப்ப சூழ்நிலை மாறி, மனித நிறங்களும் பலவாகியிருக்கின்றது. உயரம், குள்ளம், கருப்பு, வெள்ளை, என்று பல ஏற்றத்தாழ்வுகள். உணவுப்பழக்கமுறைகள் மேலும் இந்த மாற்றங்களை உறுதிப்படுத்தியிருக்கின்றது. இவையெல்லாம் சரீர சம்பந்தமானவைத்தானே!

**சரீரமே பிரச்சினைதானா?**

ஆம் என்றுதான் வேதம் சொல்கின்றது. நாம் நன்மை-தீமை அறிந்த நாளிலிருந்தே, மாம்சமும், நமக்குள்ளிருக்கும் தேவனின் சுவாசமும் (ஆவியும்) ஒன்றுக்கொன்று போராடிக்கொண்டுதான் இருக்கின்றது. ஏன்? மாம்சம் சரீர இச்சையை எடுத்துக்கொண்டதினால். ஆகையால், தேவனாகிய கர்த்தர் சரீர மரணம், பாவத்தின் சம்பளம், அதாவது நன்மை-தீமை அறிந்துகொண்டதின் விளைவு என்கிறார்.

## நன்மை-தீமை அறிந்துகொள்வது பாவமா?

தேவ நீதியின்படி, அவருடைய சாயலில் உருவான ஆவி அமைப்பு (ஆத்துமா), சரீரத்திலே நிலைபெற்றிருக்க, மனிதர் ஜீவ விருட்சத்தின் கனியைமாத்திரம் புசித்து வாழ்ந்திருக்கவேண்டும். அது கீழ்ப்படிதலின் அடையாளம். நமது இயேசப்பாவைப்போல. மாற்றாக, நன்மை-தீமை விருட்சம், மாம்ச இச்சையை தூண்டும் ஒரு கனி; அது நம்மை சுயமாக சிந்திக்க வைக்கும்; தவறான காரியங்களை ஏற்கச்சொல்லும்; தேவாதி தேவனின் நீதிகளுக்கு புறம்பாக நம்முடைய வாழ்க்கையை தள்ளிவிடும். அப்படித்தானே இன்று நம்முடைய வாழ்க்கை உள்ளது.

நன்மை-தீமை அறிந்தது எப்படி பாவமானது? தேவன் சொன்ன வார்த்தையை பொய்யென்று மறுத்த சாத்தானின் மாய வார்த்தைகளை நம்பிய ஏவாளும், ஆதாமும், தேவன் உண்மையை தங்களுக்கு சொல்லவில்லையென்று நம்பித்தானே விலக்கப்பட்ட கனியை புசித்தனர். அப்படியென்றால், அவர்களது தீர்மானத்தின்படி தேவன் பொய்யுரைத்தாக அர்த்தமாகிறது அல்லவா!. நமது தேவன் பொய் சொல்ல மனிதரல்ல. இன்று நாம் அனைவரும் கீழ்ப்படியாமையினாலே செத்து மடிகின்றோம். சரீரம் இப்படி ஒவ்வொரு நாளும் செத்துக்கொண்டிருக்க, அதனுள் இருக்கும், தேவ சாயலான ஆத்துமா, தவிக்கின்றது.

எதை நினைத்து?

நாம் என்ன வார்த்தைகளை அங்கே விதைக்கின்றோமோ, அதைப்பொறுத்துதான், நமது ஆத்தும தாகமுமிருக்கும். ஜாதி, மதமென்ற நம்பிக்கையை விதைக்கும்போது, நம்மிருதயம் மனிதநேயத்தை மறுக்கின்றது; அன்பு தனிந்து, பெருமை உயருகின்றது. நோவா என்ற ஒரு குடும்பத்தின் கதை, இன்று 220க்கும் மேற்பட்ட தேச வரலாறாக மாறியிருக்கின்றது. இது நடந்து 4000 வருடங்கள் கடந்துவிட்டது. இன்னும் உணராதபடி, நமது இருதயம் கடினப்பட்டுயிருப்பது வருத்தமான செய்தியே.

## ஆபிரகாம் ஜாதித்தலைவரா?

யார் இந்த ஆபிரகாம்; இவர் நோவாவின் மகனான சேமுடைய வம்சத்திலே உருவான ஒரு மனுஷர்; தேவனால் ஒரு உன்னதமான திட்டத்திற்காக அழைக்கப்பட்டவர் (ஆதியாகமம் 12:1-4). கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, **'உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசிர்வதித்து, உன் பேரைப் பெருமைபடுத்துவேன்; பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசிர்வதிக்கப்படும்,'** என்றார். ஆபிரகாம் வாழ்ந்த காலத்தில், பூமியிலே பல பிரிவுகளும், ஜாதிகளும் தோன்றி, பல இராஜ்ஜியங்கள் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. அப்பொழுது தேவனாகிய கர்த்தர், ஆபிரகாமை ஒரு விசுவாச சந்ததியை (பரிசுத்த ஜாதி) உருவாக்கும்படியாக அழைத்தார். சாத்தான் உலக இராஜ்ஜியங்களை அசுத்தமாக்கிக் கொண்டிருந்த வேளையில், தேவன் அவர்களை பரிசுத்தமாக்கும் விசுவாச பிரமாணத்தை ஆபிரகாமுக்கு கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்தார். இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் சந்ததியில் பிறந்து, இந்த வாக்குத்தத்தை, விசுவாச பிராமாணத்தை நிறைவேற்றினார். இன்று உலகம் முழுவதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஆசிர்வதிக்கப்பட்டுள்ளது. எந்த பெருமை ஜாதிகள் தோன்ற அடிப்படை காரணமாக சாத்தானால் விதைக்கப்பட்டதோ, அதேபெருமையை, தேவன் ஆபிரகாமுக்கு கிரீடமாக சூட்டினார். ஆம், அவரே, தாவீதின் சந்ததியில் பிறந்து, ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தை நிறைவேற்றினார். எப்படி? வேதம் இப்படி எடுத்துரைக்கின்றது.

**அதற்குப்பின்பு** (இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலுக்குபிறகு), **நான்** (பிதாவாகிய தேவன்) **மாம்சமான யாவர் மேலும்** (விசுவாசிகள்) **என் ஆவியை** (பரிசுத்த ஆவியை) **ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்** (யோவேல் 2:28).

மேற்கண்ட தேவ வார்த்தையானது, எல்லா மனுஷ ஜாதிகளிடமும் நிறைவேறிவருகின்றது. இன்று சபைகளிலே, பாலகர் வாயினாலும் தீர்க்கதரிசனம் உரைக்கப்படுகின்றது.

நண்பர்களே,

**'மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்** (இயேசுவை) **குறித்தே மேன்மை பாரட்டக்கடவன்; தன்னைத்தான் புகழுகிறவன்** (தனது ஜாதியை/மதத்தை) **உத்தமனல்ல; கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்** (2 கொரிந்தியர் 10:17, 18)', என்று வேதம் கூறுகின்றது.

தேவன் ஆபிரகாமிடம் கூறிய ஜாதி, 'பரிசுத்த ஜாதி'. தேவனைப் பொறுத்தவரையில், உலகிலே இரண்டு பிரிவுகள்தான் உள்ளது.

- பரிசுத்த ஜாதி (விசுவாச)
- அவிவிசுவாச ஜாதி

தேவனுக்குப் பயந்து, அவரது கட்டளைகளைக்கைக்கொண்டு, அவரது வார்த்தைகளின்படி நடக்கின்றவர்கள், பரிசுத்த ஜாதியினர்; மற்ற எல்லாருமே அவிவிசுவாசமானவர்கள்தான்.

தேவனின் நியாயதீர்ப்பு:

| குணங்கள் | விசுவாச ஜாதி | அவிவிசுவாச ஜாதி |
| --- | --- | --- |
| விசுவாசம் | தேவன் ஒருவரே | பல தேவர்கள் |
| தேவனின் ரூபம் | இயேசு கிறிஸ்து | மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் மற்றும் காண்பவை யாவும் |
| வழிபாடு | ஆவி ஆத்துமாவில் | சரீர அடையாளம் |
| அபிஷேகம் | பரிசுத்த ஆவி | திண்பன்டங்கள் |
| வேதம் | பரிசுத்த வேதாகமம் | பல கட்டுக்கதைகள் |
| தீர்ப்பு | மோட்சம் | நரகம் |
| பரிசு | நித்தியஜீவன் | நித்தியமரணம் |

இப்பொழுது பார்த்தீர்களா; மிகவும் தெளிவாகும் ஒரு உண்மையை; தேவனின் ஜாதி ஒன்றுதான் விசுவாசமானது, பரிசுத்தமானது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாச பிரமாணங்கள் என்ன சொல்கின்றது.

1. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், முழு பெலத்தோடும் அன்பு கூறுவாயாக.

2. உன்னிடத்தில் அன்பு கூறுவதுபோல, பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக.

இந்த இரண்டு கட்டளைகளும் ஜாதி, மதம் என்ற கோட்பாட்டை தகர்த்து, எல்லோரும் ஒரு குடும்பம், அது **இயேசுவின் குடும்பம்** என்ற நித்திய நிலையை உருவாக்குவதை காணமுடிகிறது. இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள், ஆலயத்திற்கு செல்லலாம், அவரை அன்பாய்க்கூட நேசிக்கலாம்; ஆனால் தனது உள்ளத்தில் ஜாதிக்கோ அல்லது மதத்திற்கோ ஒரு அடையாளத்தை வைத்திருந்தார்கலேயானால், கிறிஸ்து அவர்களில் பூரணப்படவில்லை என்றுதான் அது அர்த்தமாகின்றது. கிறிஸ்துவை முழுமையாக-வுடையவன்தான் கிறிஸ்தவன், அவன் சிலுவையை சுமப்பவன், மற்றவருக்காக பாடுகளை சகிப்பவன்.

**கிறிஸ்தவன் நித்திய ஜீவனில் வாழ்பவன், அவனுக்கு ஏது, எதற்கு உலக ஜாதி.**

## தனது ஜாதியில் பெண் எடுப்பது தவறா?

அது ஒருவருடைய உள்நோக்கத்தை சார்ந்தது. ஒரு விசுவாசி ஆபிரகாமைப் போல தனது பிள்ளைக்கு (ஈசாக்கு), ஒரு விசுவாசமுள்ள பெண்ணைத்தான் தேட வேண்டும். ரெபேக்காளைப் போல, ஒரு யாக்கோபை, லாபானிடம்தான் அனுப்ப வேண்டும்; அப்போதுதான் ஏமாற்றப்படுவதின் அநுபத்தை உணரமுடியும். ரூத், கர்த்தரிடம் விசுவாச-மும், பயமுமுள்ள போவாஸைத்தான் தெரிந்துகொள்ளவேண்டும்; அப்போதுதான், ஒரு விசுவாச வீரனான தாவீது அவள் சந்ததியில் பிறந்திருக்க முடியும்.

கிறிஸ்தவ பிள்ளைகளே, ஜாதியும், மதமும், சரீரத்தின் தொல்லைகள், உலக மேன்மைகள் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

சரீரத்தின் அகங்காரம் பெருமை - அது

வெளிப்படும் உருவம் ஜாதியின் கொடுமை;

தீமையின் மறைவிடம் மனித மனம் - அது

வெளியேறப்பிறந்திடும் பாவத்தின் குணம்;

பாவத்தின் சம்பளம் சரீர மரணம் - இந்த

நிலைமையை உணர்ந்திடா ஆத்துமா,

முடிவிலே அடைந்திடும் நித்தியமரணம்.

மதங்களைப்படைத்தவன் மனிதன்- இது

மனிதமனங்களைப்பிரித்திட, சத்துரு

விதைத்த பாவவிதை அன்று;

பிரிவுகள் சேர்ந்திட வழியுண்டு - அது

சிலுவையின் பாதையில் இன்று; இதை

உணர்ந்து, நாம் இயேசுவை சந்திப்பது என்று?

காலத்தைப்பிரயோசனப்படுத்துவோம்;

ஆத்துமாவை காப்போம்.

சரீரம் அழியும் - அப்போது

ஜாதியும் மதமும் அழிந்துபோம்.

அல்லேலுயா

ஆமென்

கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.